நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), செங்கல்பட்டு மண்டலம்
அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.வி.எம்.ராஜேந்திரன்.பி.இ.,

ந.க.எண்:2917/2017/செ.ம3 நாள். .12.2017

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் - 2017 - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம் செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், மாம்பாக்கம் ஊராட்சி (ம) கிராமம் சர்வே எண்கள். 248,249/1,2B,2C,264/2 & 277/17A -ல் 2.97 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்.04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்.13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/LA2 நாள்.30.10.2017 மற்றும் 07.11.2017
4. மனுதாரர் திரு. சுதாகர் (ம) மூவர் அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்:27.07.2017 (ம) 22.11.17

## உத்தரவு

பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை 3-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறையின்படி பார்வை 4-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலினை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், மாம்பாக்கம் ஊராட்சி (ம) கிராமம் சர்வே எண்கள். 248,249/1,2B,2C,264/2 & 277/17A -ல் 2.97 ஏக்கர் இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி இம்மனைப்பிரிவிற்கு மவ/நஊதுஇ(செம)எண்.263 (R) / 2017 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் (in principle approval) வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | 2.97 ஏக்கர் (அல்லது) 129373 ச.அடி |
| மொத்த மனைகள் | 90 |
| பொது ஒதுக்கீடு OSR திறவிடம் | |
| பூங்கா-1 | 3195 ச.அடி |
| பூங்கா-2 | 2738 ச.அடி |
| மொத்தம் | 5933 ச.அடி 10.11% |

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரங்கள்

1. மேற்படி மனைப்பிரிவில் விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு மட்டும் மனை ஒன்றுக்கு ரூ.500/- வீதம் 60 மனைகளுக்கு ரூ.30,000 பரிசீலனைக் கட்டணம் (Scrutiny Fees) பெறப்பட்டுள்ளது. இதர மனைகளுக்கும் மனை ஒன்றுக்கு ரூ.500/- வீதம்.
Deputy Director of Town and Country Planning, SBI, Chengalpattu,
Account No. 11006351587-ல் பெறப்படவேண்டும்.

2. வரன்முறைப்படுத்துதல் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் கீழ்க்கண்ட அரசு கணக்கில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டல அலுவலகத்தில் கீழ்க்காணும் தலைப்பினை ஊர்ஜிதம் செய்தபின் கருவூலத்தில் தொகை செலுத்தப்பட வேண்டும்.

**Regularisation Charges Head of Acctount**

0217 Urban Development - 60 other Urban Development Schemes -
800 Other receipts AT Receipts under Regularisation Charges of
Unapproved layout and Plots - DTCP
(DPC: 0217 60 800 AT 0007)

3. வளர்ச்சிக் கட்டணம் ஒவ்வொரு மனைக்கும் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் பெற்ற பின்னரே இம்மனைப்பிரிவில் அமையும் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. அரசாணை எண். (நிலை) 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள் 13.10.17-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு திறந்தவெளி ஒதுக்கீடு OSR இடம் மற்றும் சாலைகள் மாம்பாக்கம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்படவேண்டும்.

5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்ளை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ)
செங்கல்பட்டு

15.12.17

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு

பெறுநர்
1) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ).
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

விடுநர்
திரு. சா.பாபு
தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
மாம்பாக்கம் ஊராட்சி,
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்
திரு.S.E.சுதாகர் மற்றும் மூவர்,
15, ஜவஉறர்லால் தெரு,
புதுப்பெருங்களத்தூர்,
சென்னை - 100.

ந.க.எண். 1449/2017/ஆ1 நாள். 10.01.2018

ஐயா

பொருள் - அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்துதல் திட்டம் 2017 - - திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம் - மாம்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், திரு.S.E.சுதாகர் மற்றும் மூவர், சென்னை - 100. என்பவரின் சர்வே எண்கள். 248, 249/1, 2B, 2C, 264/2 & 277/17A ஆகியவற்றில் 2.97ஏக்கர் இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குதல் - முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் செலுத்தக்கோருதல் - சார்ந்து.

பார்வை - 1.அரசு ஆணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ 4(3) நாள்.04.05.2017.
2.அரசு ஆணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ 4(3) நாள்.13.10.2017.
3.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள். ந.க.எண்,2917/2017/ செ.ம.3, நாள்.08.09.2017 மற்றும் 15.12.2017.
4.தானபத்திரம் எண்.136/2018 நாள்.05.01.2018.

**********

பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் நடவடிக்கைகளின்படி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், மாம்பாக்கம் ஊராட்சி மற்றும் கிராமம், திரு.S.E.சுதாகர் மற்றும் மூவர், சென்னை - 100. என்பவரின் சர்வே எண்கள். 248, 249/1, 2B, 2C, 264/2 & 277/17A ஆகியவற்றில் 2.97ஏக்கர் இடத்தில் அமைந்துள்ள விற்கப்படாத மனை எண்கள்.6, 11, 12, 15, 18to22, 24to26, 31to37, 41to45, 57to62, 69to72, 75to91 வரையிலான 52746சதுர அடி பரப்பளவுள்ள 51மனைகளுக்கு, அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கும்பொருட்டு, பார்வை 4-ல் காணும் மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைப்பிரிவு சாலைகளை தானப்பத்திர எண். 136/2018 நாள்.05.01.2018-ன் மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், முறைப்படுத்துதல் கட்டணம் கீழ்காணும் விவரப்படி, சம்மந்தப்பட்ட அரசுத்தலைப்பில் செலுத்தவும், ஊராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வளர்ச்சிக்கட்டணம்

வங்கிவரைவாக சம்மந்தப்பட்ட ஊராட்சியில் செலுத்தவும் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

<u>மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கேட்பு</u>

| வ. எண் | அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விவரம் | அளவுகள் | அரசுத் தலைப்பில் செலுத்த வேண்டிய கட்டணம் | வங்கி வரைவு அளிக்கப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | 2.97 ஏக்கர் 129373 ச.அடி | | |
| 2. | கோரிய மனைகள் | 90 | | |
| 3. | ஒதுக்கிய மனைகள் | 90 | | |
| 4. | விற்கப்படாத மனை எண்கள். 6, 11, 12, 15, 18to22, 24to26, 31to37, 41to45, 57to62, 69to72, 75to91 வரையிலான 52746ச.அடியில் அமையும் 51மனைகளுக்கு, முறைப்படுத்துதல் கட்டணம் ரூ.30/- வீதம் 4900.26ச.மீட்டருக்கு | 4900.26 ச.மீ | 1,47,010/- | 0217 Urban Development - 60 Urban Development Scheme - 800 Other Receipts -AT Receipts under Regularisation Charges of unapproval layouts and plots - DTCP (DPC : 0217 - 60 - 800 - AT - 0007) |
| 5. | உள்ளாட்சி தனிக்கணக்கில் செலுத்தப்படவேண்டிய வளர்ச்சி கட்டணம் ரூ.25/- வீதம் 4900.26 ச.மீட்டருக்கு | | 1,22,510/- | Special Officer, Mambakkam Panchayat |
| 6. | கொடிநாள் | | 2000/- | Armed Forces Flag day Fund (payable at Tambaram) |

எனவே, மேற்காணும் விவரப்படி, செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை குறிப்பிட்ட அரசுதலைப்பு மற்றும் வங்கி வரைவாக ஒரு வார காலத்திற்குள் ஊராட்சி செயலர் மூலம் அலுவலகம் சமர்ப்பித்து மனைப்பிரிவு ஒப்புதல் உத்தரவினை பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தனி அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
மாம்பாக்கம் ஊராட்சி, திருப்போரூர்.

நகல் - திரு.என்.முரளிதரன்
மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ம-I), திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.
(கள ஆய்வு மேற்கொண்டு ஆய்வறிக்கை சமர்ப்பிக்கும்பொருட்டு)

நகல் - ஊராட்சி செயலர், மாம்பாக்கம் ஊராட்சி, திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்.